1969 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்தையொட்டி இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்குத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

4. அவையுரிமைக் கேள்வி

'நவசக்தி' நாளிதழ் மீது எழுப்பப்பட்ட அவையுரிமைக் கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நவசக்தி பத்திரிகையின் 22—3—1969-ம் நாளிதழில், இப் பேரவையின் நிகழ்ச்சிகளைத் திரித்து வெளியிட்டிருப்பதாக உரிமைப் பிரச்னை ஒன்றை திரு. மு. சின்னசாமி அவர்கள் 24—3—1969 அன்று பேரவையில் கொண்டு வந்தார்கள். அந்தப் பத்திரிகை ஒரு திருத்தம் வெளியிட்டிருந்ததேயொழிய, அதற்கு வருத்தம் தெரிவித்து எழுதவில்லை. அப்படி வருத்தம் தெரிவித்து எழுதும் என்று எதிர்பார்த்து இதைப் பின்னர் எடுத்துக்கொள்கிறேன் என்று பேரவைக்கு 25—3—1969 அன்று அறிவித்தேன்.

அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் தவறுக்கான வருத்தத்தை 26—3—1969 நாளிதழில் வெளியிட்டு விட்டதால் மேற்கொண்டு அப்பத்திரிகையின் மீது நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று அறிவிக்கிறேன்.

5. கூடுதல் வினக்களுக்கு விடையளித்தல்

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, நீங்கள் விதிமுறைகளைப் பற்றியும், நடைமுறையைப் பற்றியும், மரபுகளைப் பற்றியும் சொன்னீர்கள். அதை நான் வரவேற்கிறேன். விதிமுறைகளின் அடிப்படையில் பார்க்கும்போது சென்ற பெப்ரவரி மாதத்திலிருந்து என் கேள்விகள் ஒன்றும் இங்கு வரவேமாட்டேன் என்கிறது. 1,500 கேள்விகள் கொடுத்திருக்கிறேன். டிப்பார்ட்மெண்டிலிருந்து எனக்கு வந்திருக்கிற அதிகாரபூர்வமான லெட்டர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறைகள்கூட அதுதான். இவ்வளவு கேள்விகள் கொடுத்திருக்கிறேன், இவ்வளவுதான் வந்திருக்கின்றன என்பதுபற்றி கேட்பதுகூட இந்த அவையில் கேட்கக் கூடாது. அதைக் கூட என் அறையில்தான் கேட்க வேண்டும். 1,500 கேள்விகள் கொடுத்திருப்பதாகச் சொல்கிருர்கள். அவர்கள் கொடுத்ததில் 85 கேள்விகள்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. பேரவை கலைக்கப்பட்டு, காலாவதியாகி பின்னர் உயிரூட்டியிருப்பவை 83 கேள்விகள். புதிதாக 19 கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆக 102 கேள்விகள்தான் திரு. கோதண்டராமன் அவர்கள் பேரில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. நட்சத்திரக் குறியிடாத கேள்விகள் 13 அனுமதிக்கப்பட்டிருக்